# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 11.11.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டநடவடிக்கைகள் தீர்மான நகல்

**ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 10 குடிநீர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிற்கு தண்ணீர் ஏற்ற குடிநீர் உந்து குழாய் 17.99 கி.மீட்டர் நீளத்திற்கும் நகரில் 130.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகம் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி பகுதியில் 30 வார்டுகளிலும் 94 சுலிஸ் வால்வுகள் மூலம் அனைத்து பகுதிக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிநீர் விநியோக பணிக்கு 20 நபர்களை கொண்டு குடிநீர் விநியோக பாரமரிப்பு பணிகளை வெளிமுகமை முறை (Out sourcing) மூலம் நகர்மன்ற தீர்மானம் எண்.875 நாள்.28.06.2024 அனுமதி பெற்று 28.06.2024 ல் பணி உத்திரவு LD MAN POWER SOLUTIONS Vellore அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,

மேலும் இந்த 10 எண்ணிக்கைகள் கொண்ட குடிநீர் தொட்டிகளில் 347 எண்ணிக்கைகள் கொண்ட வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில் 1 நிரந்தரமான குழாய் திருப்புனரும் மற்றும் 20 நபர்கள் (Out Sourcing) முறையில் குழாய் திருப்புனர்களும் பணி செய்து வருகின்றனர். தற்சமயம் நிரந்தரமாக உள்ள குழாய் திருப்புநர் 1 நபர் பணி மூப்பு காரணமாக இந்த மாதம் நவம்பர் (30.11.2024) அன்று ஓய்வில் செல்கிறார். தலைமை நீரேற்று நிலையத்தில் 1 நபர் பதவி உயர்வில் செல்கிறார். எனவே குடிநீர் பணி அத்தியாவசியமாக உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்திலும், குடிநீர் வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில் வேலை செய்ய ஆட்கள் போதுமானதாக இல்லாததால் கூடுதலாக 4 நபர்கள் (01.12.2024 முதல் 31.05.2024 வரை) 6 மாத காலத்திற்கு ஆக மொத்தம் 24 நபர்கள் அமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.25,00,000/-க்கு LD MAN POWER SOLUTIONS Vellore அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
( ந.க.எண்.2376/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திருவாளர் L.D MAN POWER SOLUTION ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும், மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு-1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண். 1039**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு Raja Shri Anbu Bhavan, Bus Stand Near, Gobichettipalayam ஒப்பந்ததாரர் மூலம் உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்காலம் எதிர்வரும் 25.08.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் நகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கும் பணி எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதால் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 26.08.2024 முதல் 31.12.2024 ஆம் தேதி வரை கால நீட்டிடப்பு செய்து கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1088/2023/எச்1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு- 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண். 1040**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு –D, பிளாக் –6, நில அளவை எண். 175, நகரளவை எண்.14/1A1B இல் உள்ள ஆண்டவர் காலனி குடியிருப்பு பகுதியில் 7 செண்ட் பொது ஒதுக்கீடுக்கான இடத்தினை மாவட்ட நீதிபதி முகாம் அலுவலக கட்டுவதற்கு நகராட்சியால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தடையின்மை சான்று வழங்கியதை நகர்மன்ற தீர்மான எண். 946, நாள். 07.08.2024 இல் ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி பொது ஒதுக்கீட்டிற்கான இடத்தினை கூடுதல் மாவட்ட நீதிபதி முகாம் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்கியதையடுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.12967/2024 இன் படி இந்நகராட்சிக்கு எதிராக திரு.C. ஆனந்த குமார் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் நகர்மன்ற தலைவரையும் ஒரு பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு 05.11.2024 அன்று மேற்படி வழக்கு சென்னை உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும். மேற்படி விசாரணையில் The Honourable Division Bench High Court Of Madras 07.08.2024 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்து அதன் அறிக்கையை ஒரு வார காலதிற்குள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. மாசிலாமணி வழக்கறிஞர் அவர்களின் Junior திரு.T. சத்தியமூர்த்தி அவர்களின் 05.11.2024 ஆம் நாளிட்ட கடிதத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு முகவரியிட்டு வரப்பெற்றுள்ளதாகவும், எனவே 07.08.2024 ஆம் நாளிட்ட நகர்மன்ற தீர்மான எண். 946யை ரத்து செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்குமாறு 05.11.2024 ஆம் நாளிட்ட கடிதத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களால் கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது (ந.க.எண். 957/2024/எப்1)

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்காணும் விவரப்படி நகர்மன்ற தீர்மான எண். 946, நாள். 07.08.2024 யை ரத்து செய்து அறிக்கை சமர்பிக்குமாறு The Honourable Division Bench High Court Of Madras ஆல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாலும் நீதி மன்ற அவமதிப்பினை தவிர்க்கும் பொருட்டும் மேலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 2023 அத்தியாயம் 4, பிரிவு 164 ன் படி நகர்மன்ற தீர்மான எண். 946, நாள். 07.08.2024 யை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக அரசு விதிகள் மற்றும் நிபந்தனைகளை வருவாய் துறை பின்பற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண். 1041**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Trustus Out Sourcing Solutions Pvt Ltd, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Chennai – 91 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறை மூலம் பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 30.11.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளில் தூய்மைப் பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.12.2024 முதல் 31.12.2024 ஆம் தேதி வரை பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 631/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.3.12/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1830/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண். 1042**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. L.D. Man Power Solutions, Vellore 638 602 என்னும் நிறுவனத்தினரிடம் தினமும் 37 கொசுபுழு தடுப்பு பணியாளர்களை (DBC Workers) பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த் தடுப்பு பணியின் ஒப்பந்தகாலம் 30.11.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.12.2024 முதல் 31.12.2024 முடிய ஒருமாத காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.562/– என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து அந்நிறுவனத்தினரிடமிருந்து கொசுபுழு தடுப்பு பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6.45/– இலட்சத்திற்க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1018/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்ற தீர்மான எண். 1043**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி